கப்பட்டிருப்பது உண்மை. அதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களோ, சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களோ இங்கே இப்போதும் கொண்டு வருவதற்கு எல்லா உரிமையும் பெற்றுத்தான் இருக்கிறார்கள். அவர்கள் அதை இப்போது கொண்டு வருகிறோம் என்று கூறுவார் களேயானால் அதற்கு வழி விட்டு, அதை இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு நம்பிக்கை கோருகின்ற தீர்மானம் கொண்டு வந்திருப் பதற்குக் காரணம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந் தாலும் அதை அவர்கள் இங்கே முன்மொழிகிற நேரத்தில் அதற்குரிய எண்ணிக்கை பலம் இன்றைக்கு அவர்களுக்கு இல்லையென்ற காரணத் தால்தான், நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மூலமாக அவர்கள் எடுத்துச் சொல்ல விரும்புகின்ற கருத்துக்களுக்கு வாய்ப்பளிக்கும் எண்ணத் தில்தான் இந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆகவே, இது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு விரோதமானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகள் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தில் வழங்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். ஒழுங்குப் பிரச்சினையில் எவ்வளவு வாய்ப்பு, எவ்வளவு மணி நேரம் இந்த மாமன்றத்தில் அளிக்கப்படுகிறது என்பதை உணர்ந்திருக்கிற, அந்த உரிமையை அனுபவித்துக் கொண்டிருக்கிற நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தில் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. அவர் கள் எந்தெந்த வகையில் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்தந்த வகையில் வாய்ப்புகள் வழங்க அவையின் சார்பில் உறுதி யளிக்கிறேன் என்பதை மாத்திரம் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இதைக் குறித்து 4—12—1972 அன்றே தீர்ப்புக் கூறியிருக்கிறேன். இதற்கு விதிமுறை களில் தனி விதி இல்லை என்பதை ஒப்புக் கொண்டாலும் இதே பிரச்சினை 1952-ல் வந்தபோது அப்போது சபாநாயகராக இருந்த மாண்புமிகு திரு. சிவசண்முகம் அவர்கள் மிகத் தெளிவாக அதைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். இலண்டன் பாராளுமன்ற முறைகளைப் பின் பற்றுவதில் தவறு இல்லை. ஆகவே, இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை யென்று தீர்ப்புக் கூறுகிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23 (1)ஐ நிறுத்திவைத்தல் குறித்து.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIAN : Mr. Deputy Speaker, Sir, I move the following motion :

"That Rule 23(i) be suspended and Government Business shall have precedence and be transacted today."

The motion was put and carried.